Register No. [ | | | | | | | ]

**FPE** **4013–18**

(For the candidates admitted from 2009-2010 to 2016-17)

B.A., B.L.,/B.A.,LL.B DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018.

(Five Years Regular Course)

First Year – First Semester

LAW OF TORTS

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the basic principles of Tortions liability.

   தீங்கியல் பொறுப்படைவின் அடிப்படை நெறிமுறைளை விளக்கவும்.

https://www.tndaluonline.com

2. Write briefly about the general defences available under law of torts.

தீங்கியல் சட்டத்தின் கீழ் அமைந்திருக்கும் பொது எதிர்வாதங்களைப் பற்றி சுருக்கமாக எழுது.

3. Explain the principle of Absolute liability with the help of decided cases.

முழுப் பொறுப்பு நிலை நெறிமுறையினை தீர்க்கப்பட்ட வழக்குகளின் உதவியுடன் விளக்குக.

4. Explain the vicarious liability of state under the law of Torts.

அரசின் பகரப் பொறுப்பு நிலை தொடர்பான தீங்கியல் சட்டத்தை விளக்கவும்.

5. What is the "tort of nuisance"? What are the remedies available for it?

தொல்லைத் தீங்கு என்றால் என்ன? அவற்றிற்கு உள்ள தீர்வழிகளைக் கூறுக.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Unliquidated damages.

அறுதியிடப்படாத இழப்பீடு



(b) Bolton v. stone.

போல்டன் எதிர் ஸ்டோன்.

(c) Contributory negligence.

தற்கவனமின்மை.

(d) Waiver.

உரிமை விடுவிப்பு.

(e) Discharge of Torts.

தீங்கு விடுவிப்பு.

(f) Felonious Tort.

குற்றத் தீங்கு.

(g) Doubtful Torts.

ஐயத் தீங்குகள்.

(h) Occupier's liability.

உடைமையர் பொறுப்படைவு.

(i) Trespass ab initio.

அடி முதலே அத்துமீறலாதல்.

(j) Judicial Remedies.

நீதிமுறைத் தீர்வழிகள்.



https://www.tndaluonline.com

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.**

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A, B, C, and D are the companies combined together and drove the 'X' a company out of the tea-carrying trade by offering reduced freight. Will 'X' succeed?

அ, ஆ, இ மற்றும் ஈ ஆகிய நான்கு நிறுமங்கள் ஒன்றாக சேர்ந்து 'உ' என்ற நிறுமத்தை தேயிலை ஏற்றுமதி செய்யும் வணிகத்திலிருந்தே ஓரங்கட்டும் நோக்கத்துடன், சில சிறப்பு சலுகைகளையும் அறிவித்தனர். 'உ' வெற்றி பெறுவாரா?

8. The servants of a Railway company negligently left trimmings of grass and hedges near a railway line. Due to heavy wind, sparks from an engine set fire and carried to the plaintiff's cottage. 200 Yards away from the railway line. Whether the railway company is liable?



இருப்பூர்தி தண்டவாளத்தின் அருகே உள்ள புற்களையும், செடி கொடிகளையும் தூய்மைப்படுத்தாமல் இருப்பூர்தி பணியாளர் கவனமின்றி அப்படியே விட்டு விட்டார். மிக அதிகமான காற்றின் காரணமாக, இருப்பூர்தி பொறியிலிருந்து ஏற்பட்ட தீப்பொறியினால் தீப்பற்றி, 200 முழுக்கோல் தொலைவில் உள்ள வாதியின் வீட்டிலும் தீப் பற்றியது. இதற்கு இருப்பூர்தி நிறுமம். பொறுப்பேற்குமா?

9. A boy who is under the age of 18 slapped 'A' in the presence of several persons and pleaded as minor who cannot be made liable. Decide.

பதினெட்டு வயதிற்குக் கீழ் உள்ள ஒரு இளவர் 'அ' என்பவரை பிறர்களது முன்னிலையில் அறைந்து விட்டு, தாம் இளவர் என்பதால் தன்னைப் பொறுப்படைவிற்குள்ளாக்க இயலாது என்றும் வாதிட்டார். தீர்மானிக்க.

10. 'A' was standing on a bus stop. He was hit by a cricket ball which came from the stadium of 'B'. Whether 'B' is liable.

'அ' என்பவர் ஒரு பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தார். அப்போது 'ஆ' வின் விளையாட்டு அரங்கத்திலிருந்து வந்த மட்டைப் பந்தினால் காயமுற்றார். 'ஆ' பொறுப்பாவாரா?



https://www.tndaluonline.com

11. A clock tower of 80 years old, belonging to corporation located in the heart of the city collapsed and many number of persons died. Decide the liability of the corporation.

நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள, 80 வருட பழமையான மாநகராட்சிக்கு சொந்தமான மணிக்கூண்டு இடிந்து விழுந்ததினால் அதிகமானோர் இறந்தனர். மாநகராட்சியின் பொறுப்பு நிலையை தீர்மானிக்க.

12. A conductor of a bus without the knowledge of the Driver, drove the bus and met with an accident. will the owner of the bus be liable?

ஒரு பேருந்தின் நடத்துனர் ஒருவர், ஓட்டுனருக்குத் தெரியாமல் பேருந்தினை எடுத்து ஓட்டியதால் விபத்தினை ஏற்படுத்தினார் பேருந்தின் உரிமையாளர் பொறுப்பாவாரா?

---



https://www.tndaluonline.com